## சுருக்கம்

சமூக நலம் – மகளிர் நலம் – திருமண நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான வருமான உச்சவரம்பு ரூ.24000/– ஆக உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

-----------------------------------------------------------------------

### சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந3) துறை

அரசு ஆணை (நிலை) எண். 66

நாள்: 12 .06.2008
திருவள்ளுவராண்டு 2039
வைகாசித் திங்கள் 30ஆம் நாள்

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.196, பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் சமூக நலத்துறை, நாள் 30.11.1988
2. அரசாணை (நிலை) எண். 132, ச.ந.(ம) ச.தி. துறை, நாள் 27.05.1993

---

**ஆணை:–**

பார்வை 2–ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையின்படி, அனைத்து திருமண நல உதவித் திட்டங்களின் கீழ் நிதியுதவி பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.12000/– ஆக இருக்கவேண்டும் என ஆணை வெளியிடப்பட்டது.

2. தற்போது இந்த வருமான உச்சவரம்பு குறைவாக உள்ளது என்ற அடிப்படையிலும், அதிக எண்ணிக்கையில் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தோடும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து திருமண நிதியுதவி திட்டம் மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டங்களின் கீழ் நிதியுதவி பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பை ரூ.24000/– ஆக உயர்த்தலாம் என ஆணையிட்டுள்ளார்கள்.

3. இதற்கிணங்க, கீழ்க்கண்ட திருமண நிதியுதவி மற்றும் பெண் குழந்தைகள் (இரண்டு மட்டும்) பாதுகாப்பு திட்டங்களின் கீழ் நிதியுதவி பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பை ரூ.12000/–லிருந்து (ரூபாய் பன்னிரெண்டாயிரம்) ரூ.24000/– ஆக (ரூபாய் இருபத்தி நான்காயிரம்) உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

(அ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டம்

நிதியுதவி திட்டம்

(ஆ) ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவி திட்டம்

(இ) அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவி திட்டம் (மற்றும்)

(ஈ) சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் ( இரண்டு பெண்குழந்தைகள் மட்டுமுள்ள)

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சேப்பாக்கம், சென்னை 5
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்கள்
மாநிலக் கணக்காயர், சென்னை 18.
மாநிலக் கணக்காயர் (குணிக்கை I) சென்னை 18

<u>நகல்:</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9
நிதி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை 9
வருவாய் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை 9
சமூக நலத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை 9
நிதித்துறை, சென்னை 9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஒப்பம். . . . . 12.6.08
பிரிவு அலுவலர்